கொடுக்கவில்லை. இந்த நிலைமையில் வருகிற 9-ஆம் தேதி இரண்டாவது செமஸ்டர் பரிட்சை ஆரம்பமாக இருக்கிறது. எனவே அந்த மாணவர்களின் நலன் கருதியாவது இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமாவது பரிட்சை எழுத அனுமதி கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு—இனி கல்லூரிக்கு அனுமதி கொடுத்த பிறகுதான் புதிய மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று அரசு ஒரு நிலையை எடுத்தாலும்கூட—இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிற மாணவர்களைப் பொறுத்தவரையில் 2வது செமஸ்டர் பரிட்சை எழுத அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னிச்சையாக மாணவர்களுக்கு இன்னல் தருகிற முகத்தான் அந்தக் கல்லூரி நடந்திருக்கிறது. நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படவில்லை. பூர்த்தி செய்யப்பட்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) மணப்பாறை வட்டத்தில் கால்நடைகள் நோயால் பாதிப்பு.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மணப்பாறை வட்டத்தில், குறிப்பாக மருங்காபுரி தொகுதியில், கால்நடைகளுக்கு திடீரென்று தொண்டை அடைப்பான் வியாதி ஏற்பட்டு 1,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துவிட்டதால் பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

திருச்சி மாவட்டம், மருங்காபுரி பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த சீகம்பட்டி கிராமத்தில் 21—2—1987 அன்று கால்நடைகளுக்கு நோய் கண்டிருப்பதாக அறிந்து, அன்றைய தினமே நோய் புலனாய்வு மேற்கொண்டு, சப்பை நோயினால் கால்நடை

1987 மார்ச் 28] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கண்டறிந்து அந்த கிராமங் களிலுள்ள 310 கால்நடைகளில் 306 கால்நடைகளுக்கு மறுநாள் 22—2—1987 அன்று சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டது. இந்த நோய் கிளர்ச்சியில் 8 கால்நடைகள் பாதிக்கப்பட்டு அவற்றில் 7 மரணம் அடைந்தன. சீகம்பட்டியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சீகம்பட்டி கிராமம் சப்பை நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதி என்று கண் டறிந்து, இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து 8,331 கால்நடை களுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எனினும் செப்டம்பர் 1986 முதல் இந்த வருடத்தில் ஆறு நோய் கிளர்ச்சிகள் கண்டு 9 கால்நடைகள் மரணம் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. ஆகமொத்தம் இந்த வருடத்தில் (1986 87-ல்) நோய் கிளர்ச்சிகள் கண்டு மரணம் அடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை 16 ஆகும் (9 7).

2. தற்போது இந்நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சீகம்பட்டி பகுதியில் இப்படிப்பட்ட நோய் கிளர்ச்சி ஏற்பட்டு கால்நடைகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் ஆரம்பத்திலேயே கால்நடைத் துறை அதிகாரிகளிடத்தில் புகார் கொடுத்தோம். மருங்காபுரி ஒன்றியத்தில் உள்ள முத்தால்வார்பட்டி என்கிற ஊராட்சி மன்றப் பகுதியில் சுமார் 200 கால்நடைகள் இறந்த பிறகுதான் புகார் கொடுத்தோம். அதற்குப் பிறகு அதிகாரிகள் வந்து, பார்வையிட்டு சிறப்பாகப் பணியைச் செய்தார்கள். அப்போது அவர்கள் சொன்னது— "கால்நடைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அடிப்படையான மருந்துகளை—தொண்டை அடைப்பான் போன்ற வியாதி களுக்கான மருந்துகளை—கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான வசதிகள் இல்லை" என்றார்கள். மணப்பாறை ஒன்றியத்தில் கோழிகள் மிகவும் அதிகமாகச் செத்துக் கொண்டிருக்கின்றன. இதற்குத் தேவையான மருந்துகளைக்கூட போதுமான அளவுக்கு கையிருப்பில் வைத்துக் கொள்ள வசதி யில்லை என்று சொன்னார்கள். எனவே கால்நடைகள் என்பது

[திரு. க. சோலைராசு] [1987 மார்ச் 28

சாதாரணமாகத் தோன்றினாலும்கூட அவைகள் எல்லாம் விவசாயிகளுக்கு ஒரு மிகப் பெரிய சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே இவைகளுக்குத் தேவையான மருந்துகளை மொத்தமாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுமா என்று கேட்டுக் கொள்வதுடன் கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் செய்கிற திட்டம் ஒன்று இருக்கிறது. கால்நடைத் துறையில் பணியாற்றக்கூடியவர்கள் விவசாயிகள் மத்தியில் அதிகமாகப் பழகுகிற தன்மை இருக்கிற காரணத்தால் கால்நடைக்கான இன்சூரன்ஸ் திட்டத்தையும் கால்நடைத் துறை அதிகாரிகள் மூலமாகவே, அரசு விவசாயிகளிடத்தில் பரப்ப முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைகள் மற்றும் கோழிகள் ஆகியவற்றிற்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகளை போதிய அளவு தயாரிக்கவும், அவைகளை இருப்பில் வைத்துக் கொள்வதற்கு தற்போது வசதி இல்லை என்ற குறையைப் போக்கவும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும்.

(ஈ) திருவொற்றியூரில் விஷச் சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட இறப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஜி. கே. ஜெ. பாரதி மற்றும் சா. ஜெயச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவொற்றியூரில் கடந்த மாதம் கள்ளச் சாராய விபத்தில் 30 பேர்கள் உயிர் இழந்ததினால் அவர்கள் குடும்பம் அவதிப்படும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.